அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641018

பி. ஏ தமிழ் - முதலாம் ஆண்டு
இலக்கணம் – நன்னூல்  - சொல்
இரண்டாம் பருவம் - 18BTA23C

அலகு – 2 வினையியல்

பெயர்  :  மு. ஜோதி
துறை  :  தமிழ்த்துறை
அலைபேசி  :  9487193006

# வினையியல்

**தெரிநிலை வினை**

செய்பவன், கருவி,நிலம், செயல்,காலம்,செயப்படு பொருள், எனும் ஆறு பொருட்களின் இயக்கத்தை வெளிப்படுத்துவது தெரிநிலை வினைமுற்று ஆகும்.

குயவன் மண் தண்ட சக்கரம் முதலியவற்றால் வீட்டில் நேற்று குடத்தை வனைந்தான் .

செய்பவன் - குயவன் (எழுவாய்)

கருவி- மண்( முதற்காரணம்)

நிலம் - வீடு

செயல்- வனைதல்

காலம் –நேற்று

செயல்படு பொருள்- குடம்

**குறிப்புவினை**

குறிப்பு வினை பொருள், இடம் ,காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறு பொருளில் அடிப்படையை மையமாகக்கொண்டு முற்று எச்சம் விகுதிகள் பெற்று செய்பவன் எனும் கருத்தாவை மட்டும் விளக்கக்கூடிய தாகும்.

எ .கா

பொருள் - குழையன்

இடம் - அகத்தினன்

காலம் - ஆதிரையன்

சினை - காலன்

குணம் - நல்லன்

தொழில் - நடையன்

**வினைச்சொற்களின் பகுப்பு**

தெரிநிலை குறிப்பு அடிச்சொற்கள் வழி வினைமுற்று களும் பெயர், வினை எச்சங்களும் தோன்றும். அவை ஒன்றுக்கு மட்டும் சிறப்பாக வரக்கூடியவை, பலவற்றுக்கு பொதுவாக வருபவை என இரு பகுப்பில் அடங்கும்.

**வினைமுற்று**

செய்பவன் , கருவி , நிலம், செயல், காலம்,செய்பொருள் என்னும் ஆறு வேற்றுமை பொருளையும் ஏற்கும் தன்மையுடன் பொருள்,இடம் காலம்,சினை, குணம், தொழில் என்னும் ஆறு எழுவாய் அல்லது பிறவற்றை ஏற்காத தெரிநிலை குறிப்பு முற்றுகள் ஆகும்.

| | தெரிநிலை | குறிப்பு |
|---|---|---|
| பொருள;;;; | அவன் வந்தான் | அவன் நல்லd; |
| இடம் | நிலம் குளிர்ந்து | நிலம் வypது |
| காலம் | கார் வந்தது | கார் fupaJ |
| rpid | கை குவிந்தது | கை சிறியது |

| | | |
|---|---|---|
| குணம் | நன்மை வந்தது | நன்மை பெரியது |
| தொழில் | பிறப்பு ஒழிந்தது | பிறப்பு நல்லது |

**தெரிநிலை வினைமுற்றின் பாகுபாடு**

ஒருவன் எனப்படும் ஆண் பாலும் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் எனும் பிறவும் படர்க்கை இடத்து வரும் ஐம்பால் ஆகும். ஒருமை பன்மை எனத் தன்மையிலும் முன்னிலையிலும் இரு எண் பாகுபாடு அமையும். மூன்று காலமும் சேர்ந்து படர்க்கையில்15 ம் தன்மையில் ஆறும் முன்னிலையில் ஆறும் திணை பால் எண் இடம் காட்டும் வினைமுற்றுக்கள் 27 ஆகும்.

**ஐம்பால் மூவிடப் பொது வினைகள்** .

வேறு இல்லை உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்று கடளும் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவானவை ஆகும்.

**பெயரெச்சம்**

வினைமுற்றின் திரிபே பெயரெச்சம் ஆகும். வந்தான் என்பது வந்த என்றாகும். வந்த பையன் எனப்பெயர் கொண்டு முடியும்.

செய்த செய்கின்ற செய்யும் என்னும் மூன்று பெயரெச்ச வாய்ப்பாடு களிலும் காலமும் செயலும் வெளிப்படும். திணை பால் எண் இடம் காட்டும் விகுதிகள் இருப்பதில்லை. செய்பவன் கருவி நிலம் செயல்

காலம் செய்பொருள் என்னும் ஆறையும் இவை பெற்று முன் மொழியாக நிற்கும்.

**வினையெச்சம்**

முற்றின் திரிபே வினை எச்சம் ஆகும். வந்தான் வந்து எனவும் அறிந்தான் அறிந்து எனவும் தெரியும். வினையெச்சம் வந்து சென்றான் என வினை கொண்டு முடியும்.

செயலும் காலமும் விளங்க திணை பால் எண் இடம் காட்டும் விகுதிகளும் முடிய வேண்டிய வினையும் இல்லாமலிருப்பது வினையெச்சம் ஆகும். பெயரெச்சம் பெயர் கொண்டு முடிவது போல் (வந்த பெண்) வினையெச்சம் வினை கொண்டு முடியும் (வந்து நின்றாள்) வினையெச்சத்திற்கும் அதைj; தொடர்ந்து வரும் தன்மை முன்னிலை படர்க்கை முற்றுகளாக இருக்கும்.